

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன், திருக்கோவிலூரில் கட்டப்பட்டு வரும் புதிய மாவட்ட மருத்துவமனை கட்டுமானப் பணியினை கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பிரசாந்த், மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.தங்கம், நகர செயலாளர் கோபிகிருஷ்ணன், ஒன்றியச் செயலாளர்கள் அ.சா.ஏ.பிரபு, பி.வி.ஆர்.சு.விசுவநாதன், பேரூராட்சி மன்ற தலைவர் எஸ். அன்பு, நகர மன்ற துணை தலைவர் உமாமகேஸ்வரி குணா, மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### தயாளன் தலைமை! மரக்காணம் ஒன்றியம் கூனிமேடு, கீழ்புத்துப்பட்டு

# ஊராட்சிகளில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

திண்டிவனம், ஜூலை 21-

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் சட்டமன்ற தொகுதி மரக்காணம் ஒன்றியம் கூனிமேடு, கீழ்புத்துப் பட்டு ஆகிய ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் சிறப்பு முகாம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் தலைமை தாங்கினார். ஒன்றிய துணை சேர்மன் பழனி,ஒன்றிய கவுன்சிலர்கள் விஜயா பெருமாள், துர்கா தேவி கலைஞர் ஆகியோர் முன்னிலையில் வகித்தனர். வட்டார வளர்ச்சி அலுவலர் சிலம்பு செல்வன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்து கொண்டு உங்களுடன் ஸ்டாலின்திட்டத்தினை தொடங்கி வைத்து பொது மக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அவர் அறிவுறுத்தினார். தொடர்ந்துமுகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார் இதையடுத்து வேளாண்மை திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்களை அவர் வழங்கினார். தொடர்ந்து மரக்காணம் வட்டார ஆரம்ப சுகாதார மருத்துவமனை சார்பில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினையும் ரத்த அழுத்தம், சர்க்கரை, நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இல்லம்தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்து மாத்திரை அடங்கிய பெட்டகத்தினை முன்னாள் அமைச்சர்செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ வழங்கினார்.

நிகழ்ச்சியில் திண்டிவனம் சிப்காட் துணை ஆட்சியர் விஜயா, மாவட்டத் துணைச் செயலாளர் ரவிக்குமார், மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், மாவட்ட கவுன்சிலர் புஷ்பவள்ளி குப்புராஜ்,ஊராட்சி மன்ற தலைவர்கள் கூனிமேடுகஸ்தூரி ஜெயராமன், கீழ்புத்துப் பட்டு ஆறுமுகம்,நிர்வாகிகள் பொது குழு உறுப்பினர் பாலகிருஷ்ணன், மாவட்ட மீனவரணி அமைப்பாளர் தங்கராஜ்,தொழிலாளர் அணி நடுக்குப்பம் செந்தில்குமார்,பாலசுந்தரம், தமிழ்வாணன், விஜயகுமார், வினோத்குமார், சீனு, மணி, ஆறுமுகம், துளசி, வேலாயுதம்,முத்துப்பாண்டி, பிரகாஷ் உள்ளிட்ட நிர்வாகி கள் கலந்து கொண்டனர் வட்டார வளர்ச்சி அலுவலர் அருளரசி அனைவருக்கும் நன்றி கூறினார்.

### எஸ்.கே.எஸ்.சிக்கந்தர் பாபு தலைமையில் – திருச்சி குண்டு பிலால் முன்னிலையில்

# சவூதி அரேபியா கிழக்கு மாகாண அயலக அணியின் மாதாந்திர கலந்தாய்வுக் கூட்டம்!

## 100—க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு!

சவூதி, ஜூலை 21-

சவூதி அரேபியா கிழக்கு மாகாண அயலக அணியின் மாதாந்திர கலந்தாய்வு கூட்டம் ஜூலை 4-ஆம் தேதி கோபார் நகரத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியை அயலக அணி கிழக்கு மாகாண அமைப்பாளர் எஸ்.கே.எஸ். சிக்கந்தர் பாபு தலைமையில் கிழக்கு மாகாணதுணை அமைப்பாளர் திருச்சி குண்டு பிலால் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் இளைஞர் அணி அஷ்ரஃப்தீன், மகளிர் அணி திருமதி. பரிதா பானு மற்றும் பொறுப்பாளர்கள் ஆகாமது கபீர், சிவகுமார், ஆனந்தராஜ், ராபர்ட், இம்ரான், வினோத், திருமதி. தௌலத், திருமதி. சபர்மதி, மற்றும் நிஹார், அஜ்மல், சலாவுதீன், சையத் அலி, சுல்தான், அப்துல் பாசித், சவுதி வாசி ரஃபி, ஜின்னா, சிவா, கலீஃபா, அசார், நிசார், ரியாஸ், ஃபஹத், முகமது சேத்தப்பா, பீர் முகமது, சகாயராஜ் சத்யராஜ், சோழராஜன், ராஜேஷ், சதாம், முகமது ரவூஃப், அஹ்மத், மார்ஜூன், ரியாஸ் மற்றும் மாணிக்கம் என 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.



வேலூர் சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் கஸ்பா திரவுபதி அம்மன் கோவில் முகப்பு வளாகத்தில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடத்தை மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்எல்ஏ திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் சுஜாதாஆனந்த குமார் 4வதுமண்டலகுழு தலைவர் வெங்கடேசன் ஊர் சேர்வை கோ.அன்பழகன் மாமன்ற உறுப்பினர்கள் ரேகாஅன்புநிதி, திருப்பாவை தனபாலன், தபசும்பர்வீன் அசாதுல்லா பகுதி கழக செயலாளர்கள் தி.அ. முன்வர்பாஷா வி.ஜி.கே.சுந்தர விஜி, பாலமுரளி கிருஷ்ணா, வட்ட, பகுதி கழக நிர்வாகிகள் மாணிக்கவாசகம், கோ.சரவணன், கிருஷ்ணமூர்த்தி, அஸ்லாம்கான், அசோக்குமார் சோனிசர்தார், நவீன் குமார், வடிவேலு, தேன்மொழி, பெருமாள், பாலமுருகன் நிஜாமுதீன் கோவில் அறங்காவலர் குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஜெ.ரவிக்குமார், லதாமோகன், நீலகண்டன் ஒப்பந்ததாரர் சீனிவாசன் மற்றும் ஊர் தர்மகத்தாக்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர் .



சவூதி அரேபியா கிழக்கு மாகாண அயலக அணியின் மாதாந்திர கலந்தாய்வு கூட்டம் ஜூலை 4–ஆம் தேதி கோபார் நகரத்தில் அயலக அணி கிழக்கு மாகாண அமைப்பாளர் எஸ்.கே.எஸ். சிக்கந்தர் பாபு தலைமையில் கிழக்கு மாகாண துணை அமைப்பாளர் திருச்சி குண்டு பிலால் முன்னிலையில் நடைபெற்றது. இதில் இளைஞர் அணி அஷ்ரஃப்தீன், மகளிர் அணி திருமதி. பரிதா பானு என 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.





விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் சட்டமன்றதொகுதி மரக்காணம் ஒன்றியம் கீழ் புத்துப்பட்டு, கூனிமேடுஆகிய ஊராட்சிகளில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமைமுன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி ,மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார்,மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன்,திண்டிவனம் சிப்காட் துணை ஆட்சியர் விஜயா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிலம்புச் செல்வன், அருளரசி உள்ளனர்.

### எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கி இருப்பதால்

# அமித்ஷா பிடியிலிருந்து அ.தி.மு.க. மீள முடியாது!

## தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை,ஜூலை. 21-

எடப்பாடி பழனிச்சாமி உள்ளிட்ட அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கி இருப்பதால் அமித்ஷா பிடியிலிருந்து அ.தி.மு.க. மீள முடியாது என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ. அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப் பெருந்தகை விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

2014 மக்களவை தேர்தலில் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா நரேந்திர மோடிக்கு எதிராக மோடியா? லேடியா? என்று கடுமையான பிரச்சாரத்தை மேற்கொண்டார் 2016 இல் அவர் மறைகிற வரை நீட், உதய் மின்திட்டம் உள்ளிட்ட தமிழக மக்கள் விரோத திட்டங்களை நிறைவேற்ற மறுத்து வந்தார். ஆனால் அவரது மறைவிற்கு பிறகு முதலமைச்சராக வந்த எடப்பாடி பழனிச்சாமி தமிழக கிராமப்புற மாணவர்களின் மருத்துவக் கனவை சீரழிக்கும் ஒன்றிய பாஜக அரசின் நீட் தேர்வை முதல்முறையாக 2017 இல் நடைமுறைக்கு கொண்டுவந்தார். ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சி செய்த 2014 வரை தமிழகத்தில் நீட் திணிக்கப்படவில்லை. அதேபோல உதய் மின் திட்டத்தை அன்றைய அதிமுக அரசு ஏற்றுக்கொண்டது. ஆனால் அத்திட்டத்தின் படி 75 சதவீத கடனை தமிழ்நாடு மின்சார வாரியம் ஏற்க வேண்டும். ஆனால் 34.88 சதவீத கடன் தான் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மீதி கடனை ஈடுகட்ட எடப்பாடி அரசு நடவடிக்கை எடுக்காததால் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கடன் சுமை 2011 - 2012 இல் இருந்ததை விட 2021 இல் ஒரு லட்சத்து 35 ஆயிரம் கோடி ரூபாய் ஆக உயர்ந்து - அதாவது 332 சதவீதம் அதிகரித்தது. இதனால் மின்சார வாரியம் கடும் நிதி நெருக்கடியில் சிக்கியது. 8 ஆண்டுகளில் மின் கட்டண உயர்வு செய்யாத காரணத்தால் 2022 இல் செய்ய வேண்டிய நிலை திமுக அரசுக்கு ஏற்பட்டது. இதற்கு காரணம் அதிமுக ஆட்சியே தவிர, திமுக ஆட்சி அல்ல.

2021 சட்டமன்ற தேர்தலில் கூட்டணி அமைத்து போட்டியிட்ட அ.தி.மு.க. - பாஜக, 2023 இல் கூட்டணியை முறித்துக்கொண்டதாக எடப்பாடி பழனிசாமி அறிவித்தார். 2024 மக்களவை தேர்தல் மட்டுமல்ல, 2026 சட்டமன்ற தேர்தலிலும் பாஜகவுடன் கூட்டணி இல்லை என்று அறிவித்தார். அந்த அறிவிப்பு வெளிவந்த உடனே அதிமுக தலைமை அலுவலகத்தில் தொண்டர்கள் பட்டாசு வெடித்து கொண்டாடினார்கள். ஆனால் காலப்போக்கில் உள்துறை அமைச்சர் அமித்ஷா கொடுத்த நிர்பந்தத்தின் காரணமாக பாஜக கூட்டணியில் சேரவேண்டிய நிர்பந்தம் அதிமுகவுக்கு ஏன் ஏற்பட்டது என்பதை எடப்பாடி பழனிசாமி இது வரை விளக்கவில்லை.

#### வாய் மூடி இருந்த அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள்!

சமீபத்தில் மதுரையில் நடந்த முருகன் மாநாட்டில் திராவிட இயக்கத்தையும், பெரியார், அண்ணா உள்ளிட்ட தலைவர்களை இழிவுபடுத்தி வீடியோ வெளியிட்ட போது மேடையில் அமர்ந்திருந்த உதயகுமார், வேலுமணி உள்ளிட்ட அதிமுக முன்னாள் அமைச்சர்கள் வாய் மூடி மௌனியாக இருந்தது ஏன்? திராவிட இயக்கத்தை அழிப்போம், ஆன்மீகத்தை வளர்ப்போம் என்றும், அரசு கட்டுப்பாட்டில் இருந்து கோயில்களை விடுவிக்க வேண்டும் என்றும் முருகன் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியபோது அதை எதிர்க்க துணிவில்லாமல் அதிமுக ஜால்றா அரசியல் நடத்தியது. ஆனால், திமுக தலைமையிலான கூட்டணியில் உள்ள காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் ஜால்றா அடிப்பதாக கூறுவது மல்லாந்து படுத்துக் கொண்டு எச்சில் துப்புவதற்கு சமமாகும்.

#### அ.தி.மு.க. ஆட்சியில் கடன் சுமை அதிகரிப்பு

அதேபோல தமிழகத்தின் கடன்சுமை அதிகரித்துவிட்டதாக எடப்பாடி பழனிசாமி பேசியிருக்கிறார். 2011 இல் அதிமுக ஆட்சி அமைந்தபோது, திமுக ஆட்சி வைத்த கடன் ரூபாய் ஒரு லட்சம் கோடி. ஆனால் 2021 இல் ஆட்சியை விட்டு அதிமுக விலகுகின்ற பொது வைத்திருந்த கடன் ரூ.5.7 லட்சம் கோடி. 10 ஆண்டுகால அதிமுக ஆட்சியில் பெற்ற கடன் ரூ. 4.18 லட்சம் கோடி. இந்நிலையில் தமிழகத்தின் கடன் சுமையை பற்றி பேசுகிற எடப்பாடி பழனிசாமி ஒன்றிய பாஜக அரசின் கடன் சுமையை பற்றி பேச துணிவு இருக்கிறதா? 2014 இல் ஒன்றிய காங்கிரஸ் கூட்டணி அரசு வைத்துச்சென்ற கடன் ரூ. 55 லட்சம் கோடி. ஆனால் 2025 இல் ஒன்றிய பாஜக அரசின் கடன் ரூ. 185 லட்சம் கோடி. 1947 முதல் 2014 வரை 67 ஆண்டுகளில் ஒன்றிய அரசின் கடன் ரூ. 55 லட்சம் கோடி தான். ஆனால் 2014 முதல் 2025 வரை 11 ஆண்டுகளில் ரூ. 130 லட்சம் கோடி ஒன்றிய பாஜக அரசு கடன் வைத்திருக்கிறது. இதன்படி இந்தியாவில் தனிநபர் கடன் ரூ. 1 லட்சத்து 50 ஆயிரம். வரலாறு காணாத கடன் சுமையால் பொருளாதார பேரழிவை விமர்சனம் செய்யாமல் இருக்கும் எடப்பாடி பழனிசாமி பாஜகவுக்கு ஜால்றா அடிப்பது ஏன்?

ஒன்றிய அரசின் 3 கருப்பு வேளாண் சட்டங்களுக்கு ஆதரவு, சிறுபான்மையினரை குறிவைத்து கொண்டுவரப்பட்ட குடியுரிமை திருத்தச் சட்ட ஆதரவு, உதய் மின் திட்டத்தில் சேர்ந்து மின் கட்டண உயர்வுக்கு காரணமாக இருந்த அதிமுகவை விட ஒரு ஜால்றா கட்சி வேறு எதுவும் இருக்க முடியாது. புதிய கல்விக்கொள்கை என்ற பெயரில் மும்மொழி கொள்கை திணிப்பு, மும்மொழி கொள்கையை ஏற்கவில்லை என்றால் கல்வித் துறைக்கு நிதி வழங்க மறுப்பு, தொகுதி சீரமைப்பு என்று கூறி தென் மாநில நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைக்கும் முயற்சியை எதிர்க்காத அதிமுகவை விட ஒரு அடிமை கட்சி வேறு எதுவும் இருக்க முடியாது, எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட முன்னாள் அமைச்சர்கள் ஊழல் குற்றச் சாட்டுக்களில் சிக்கி அமலாக்கத்துறை, வருமானவரித் துறையின் பிடியில் இருக்கிற வரை அமித்ஷாவின் பிடியில் இருந்து அதிமுக மீள முடியாது. அதனால் தான் தற்கொலைக்கு சமமான முடிவை அதிமுக எடுத்திருக்கிறது. எனவே எடப்பாடி பழனிசாமி சுற்றுப்பயணங்களில் மக்கள் முன்னால் நீலிக்கண்ணீர் வடிப்பதை எவரும் நம்பவும் மாட்டார்கள், ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள்.

இவ்வாறு கு.செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கடலூர் மேற்கு மாவட்டம்,அண்ணாகிராம ஒன்றியம் எனதிரிமங்கலம் கிராமத்தில் காவனூர், கரும்பூர், கொறத்தி, எனதிரிமங்கலம் ஆகிய ஊராட்சிகளுக்கு, உங்களுடன் ஸ்டாலின் , திட்ட மனுக்கள் பெரும் முகாம் நடைபெற்றது. தி.மு.க. அண்ணா கிராம ஒன்றிய செயலாளர் – ஆத்மா குழு உறுப்பினர் வி.கே. வெங்கட ராமன் பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்று தொடங்கி வைத்தார். பண்ருட்டி வட்டாட்சியர் பிரகாஷ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மோகனாம்பாள், புனிதா, வட்ட வழங்கல் அலுவலர் சிவகுமார், அண்ணா கிராம மேற்கு ஒன்றிய செயலாளர் ராமு (எ) ராமச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் என்.பலராமன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.